# 14 சந்தான குரவர்

எமது சமயத்தை வளர்த்த பெரியோர்கள் வரிசையில் பக்தி மார்க்கத்தை வளர்த்த சமய குரவர்களுக்கு அடுத்த நிலையில், சைவசித்தாந்த சாத்திரங்களைப் போதித்த தத்துவ ஞானிகளாக சந்தான குரவர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர். சந்தானம் என்றால் தலைமுறை அல்லது பரம்பரை என்பது பொருள். குரவர் என்பது




குருமார், ஞானாசிரியர் எனப் பொருள்படும். பரம்பரையாக வந்த ஞானாசிரியர்கள் என்றும் குருசீட பரம்பரையில் சைவசித்தாந்த சாத்திர நூற்பயிற்சி வழங்கிய தத்துவ ஞானிகள் என்றும் பொருள் கொள்ளலாம்.

திருக்கைலாயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கண்ட பரமேஸ்வரனிடம் ஞான உபதேசம் பெற்ற திருநந்தி தேவர், சனற்குமார முனிவர், சத்தியஞான தர்சனிகள், பரஞ்சோதி முனிவர் நால்வரும் அச்சந்தானகுரவர் எனவும், பரஞ்சோதி முனிவரிடம் ஞான உபதேசம் பெற்ற மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் நால்வரும் புறச்சந்தான குரவர் எனவும் அழைக்கப்படுவர். புறச்சந்தான குரவர் வரலாற்றினைச் சுருக்கமாக நோக்குவோம்.

## அ. மெய்கண்ட தேவர்

திருமுனைப்பாடி நாடு என்னும் நாட்டிலே திருப்பெண்ணாகடம் என்ற ஊரில் வசித்துவந்த அச்சுதகாளப்பாளர், மங்களாம்பிகை என்னும் சிவபக்த தம்பதியினர் பிள்ளைப்பாக்கியம் இல்லாத குறையினால் மனம் வருந்தி இறைவனைப் பிரார்த்தித்து, தமது குலகுருவான திருத்துறையூர் சகலாகமபண்டிதர் என அழைக்கப்படும் சதாசிவ சிவாச்சாரியாரிடம் தமது மனக் குறையினை முறையிட்டனர். அவரின் ஆலோசனைப்படி திருவெண.காட்டிலுள்ள சுவேதனப் பெருமாளை வணங்கி அத்தலத்திலுள்ள பொய்கையில் நீராடினர். சுவேதனப் பெருமாள் அருளால் குழந்தைப் பாக்கியம் பெற்ற அச்சுதகளப்பாளரும் மனைவியாரும் தமது பிள்ளைக்குச் சுவேதனப் பெருமாள் எனப்பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

குழந்தைப் பருவத்தில் திருஞானசம்பந்தரைப் போல சுவேதனப்பெருமாளும் ஞானக்குழந்தையாக விளங்கினார். குழந்தைக்கு மூன்று வயதாகும் பருவத்தில் ஏனைய குழந்தைகளுடன் விளையாடும் போது, அவ்வழியால் வந்த பரஞ்சோதி முனிவர், மெய்ஞ்ஞானத்தை உணரும் பக்குவநிலையினை உணர்ந்து, அக்குழந்தைக்கு மெய்ஞ்ஞானத்தை உபதேசித்து தமது குருவாகிய சத்திய ஞான தரிசினியின் ஞாபகமாக மெய்கண்டார் எனும் தீட்சா நாமத்தைச் சூட்டியருளினார்.

மெய்கண்டார் தாம் பெற்ற மெய்ப்பொருள் உண்மைகளை தமது மாணவர்களுக்கு போதித்து வந்தார். அந்தவகையில் 49 மாணவர்கள் முக்கியமானவர்களாவர். அவர்களில் அருணந்தி சிவாச்சாரியார், மனவாசங்கடந்தார், சிற்றம்பல நாடிகள் என்னும் மூவர் குறிப்பிடத்தக்கவர்கள். மெய்கண்டார் தமது போதனைகளை சிவஞானபோதம் என்னும் தத்துவ நூலாக இயற்றினார். சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கிற்கும் முதல் நூலாக இந்நூலே திகழ்கின்றது. ஐப்பசி மாத சுவாதி நட்சத்திரத்தில் முத்தியடைந்தார். இவரின் குரு பூசை தினத்தைத் தமிழ் நாட்டிலுள்ள சைவசித்தாந்திகள் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

### ஆ. அருணந்தி சிவாசாரியார்

தமிழ் நாட்டிலுள்ள திருத்துறையூரிலே ஆதிசைவர் குலத்திற் பிறந்தவர் அருணந்தி சிவாசாரியர். இவரின் இயற்பெயர் சதாசிவம். பல சமயநூற் கல்வியில் ஆழமான அறிவும் அனைத்து ஆகம நூற்கல்வியில் வித்துவமும் பெற்றமையால் சகலாகம பண்டிதர் என்னும் காரணப் பெயரும் இவருக்கு உண்டு.

சிறு பிள்ளையாக இருந்த மெய்கண்டர் திருவெண்ணெய் நல்லூரில் தமது மாணவர்களுக்குச் சாத்திர நூல்களைப் போதிப்பதைக் கேள்வியுற்று, தமது சீடனின் பாலகனுக்கு அப்படியென்ன ஞானமுண்டு என்று அகந்தையுற்று, அதனைச் சோதித்துப் பாரக்க ஒரு நாள் சென்ற வேளையில், மெய்கண்டார் ஆணவத்தினைப் பற்றி போதித்துக் கொண்டிருந்தார். ஆணவத்தின் சொரூபம் யாது? என ஆணவத்துடன் வினவினார். மாணவர்கள் திகைப்புற்று குருவையும் கேள்வி கேட்டவரையும் மாறி மாறி வியப்புடன் பார்த்தனர். மெய்கண்டார் மௌனமாக ஒரு புன்முறுவலுடன் தனது சுட்டுவிரலை கேள்வி கேட்டவரை நோக்கி நீட்டினார். அதன் பொருள் நீதான் என்பதாகும். மெய்கண்டாரின் அருட்பார்வைப் பட்டதுதான் தாமதம், அவரின் காலடியில் சாஸ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினார். மெய்கண்டாரும் சதாசிவனாருக்கு அருணந்தி சிவாச்சாரியார் எனும் தீட்சா நாமம் வழங்கி, தமது சீடராக ஏற்றுக்கொண்டார்.

மெய்கண்டார் உணர்த்திய மெய்ப்பொருள் விளக்கத்தினால் ஞானம்பெற்ற அருநந்தி சிவாச்சாரியார் மெய்கண்டார் இயற்றிய சிவஞான போதத்துக்கு வழிநூலாக சிவஞான சித்தியாரை அருளிச் செய்தார். அத்துடன் இருபா இருபது எனும் நூலையும் இயற்றினார்.

### இ. மறைஞான சம்பந்தர்

திருப்பெண்ணாடகத்தில் அந்தணர் குலத்தில் பிறந்த ஞானி, மறைஞான சம்பந்தர் ஆவார். வேதநெறிக் கல்வியும் மிகு சைவத்துறைக் கல்வியும் துறைபோனவர். ஞானமார்க்கத்தில் சிறிதுகாலம் மௌன விரதம் காத்து வாழ்ந்தவர். இதனால் இவர் மறைஞான சம்பந்தர் எனப்பட்டார். இவரின் இயற்பெயர் பரமசிவானந்தம் என்பதாகும்.

அருணந்தி சிவாச்சாரியாரிடம் சீடராக ஞான உபதேசம் பெற்றார். திருக்காளஞ்சேரி என்னும் இடத்தில் பிரமபுரேசர் சந்நிதியில் சீடர்களுக்கு ஞானவிளக்கம் அளித்து வந்தார். எளிமையான வாழ்க்கை முறையும் தூய சிந்தனையும் கொண்டவராக மறைஞான சம்பந்தர் திகழ்ந்தார். இவரது முதன்மைச் சீடர் உமாபதி சிவாச்சாரியாராவார். இவர் நூல் எதனையும் இயற்றவில்லை என்ற போதிலும் சதமணித் திரட்டு என்னும் நூலை இயற்றினார் என்றும் அறிஞர்களிடையே கருத்துபேதமுண்டு. மறைஞான சம்பந்தர் முத்தியடைந்த தினம் ஆவணிமாத உத்தர நட்சத்திரமாகும்.

### ஈ. உமாபதி சிவாச்சாரியார்

உமாபதி சிவாச்சாரியார் சிதம்பரம் தில்லைவாழ் அந்தணர்களில் ஒருவர். வேதநெறியிற் சிறந்த தேர்ச்சி பெற்றவரான உமாபதி சிவாச்சாரியார் சைவசித்தாந்த ஞானத்திலும் பெரும் புலமை பெற்ற நல்லறிவாளராகத் திகழ்ந்தார். சிதம்பரம் திருக்கோயிலுக்குச் சற்றுத்தொலைவில் உள்ள கொற்றவன் குடி (தற்போது கொத்தங்குடி) எனும் சிற்றூரில் வசித்து வந்தமையினால் கொற்றவன் குடி முதலியார் என்னும் சிறப்புப் பெயராலும் அழைக்கப் பெற்றார்.

ஒருமுறை உமாபதிசிவம் சிதம்பரம் நடராசாப் பெருமானுக்குப் பூசை செய்த பின்னர் சிவிகையில் ஏறி கொடி, குடை, தீவர்த்தி முதலான கௌரவச் சின்னங்களோடு தமது இருப்பிடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். அப்பொழுது அவ்வழியால் தமது சீடர்களுடன் வந்த மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியாரைப் பார்த்து ''பட்டக்கட்டையில் பகற்குருடு போகின்றது பார்'' என்று கூறினார். அவ்வார்த்தைகள் உமாபதியின் சிந்தனையைக் கிழர்ந்தெழச் செய்தன. அதன் குறிப்புப் பொருளை உணர்ந்த உமாபதி சிவாச்சாரி சிவிகையை விட்டிறங்கி மறைஞான சம்பந்தர் பாதங்களில் விழுந்து வணங்கினார். அவரின் பக்குவநிலைகண்டு தமது சீடராக ஏற்றுக்கொண்டார்.

உமாபதி சிவாச்சாரியாரின் பக்குவ நிலையை உலகிற்குக் காட்ட எண்ணிய மறைஞானசம்பந்தர், நெசவுக்குப் பசையிட வைத்திருந்த கூழை வாங்கி அருந்தினார். அருகே பயபக்தியுடன் நின்றுக்கொண்டிருந்த உமாதி சிவாச்சாரியார், குருவின் முழங்கை வழியாக ஒழுகிய கூழைப் பிரசாதமாக பருகினார். இச்செயலைக் கேள்வியுற்ற தில்லைவாழ் அந்தணர்கள் சிதம்பர நடராசருக்குப் பூசை செய்ய விடாமல் தடுத்தனர். அம்முறை நடைபெற்ற கொடியேற்ற விழாவில் கொடி ஏறாமல் தடைப்பட்டது. உமாபதி சிவாச்சாரியாருக்கு தாம் செய்த தீங்கே அதற்குக் காரணம் என்பதை உணர்ந்த தில்லை வாழ் அந்தணர்கள் அவரிடம் சென்று பிரார்த்தித்தனர். உமாபதியார் கொடிக்கவி என்னும் பாடலைப் பாடி மீண்டும் கொடியினை ஏறச்செய்தார்.

இறைவனின் சீட்டுத் தகவலின்படி பெற்றான் சாம்பான் என்ற அடியவர்க்கு முத்தியளித்தார். இதனை நம்ப மறுத்த மக்களுக்கும் மன்னவனுக்கும் நயன தீட்சை மூலம் முள்ளிச்செடிக்குமுத்தியளித்து உண்மையை நிலைநாட்டினார். இதனால் முள்ளிச்செடிக்கு முத்திகொடுத்த நாயனார் என்றும் புகழப்பட்டார்.

உமாபதிசிவாச்சாரியார் சிவபிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றி பஃறொடை , கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறிவிளக்கம், சங்கற்பநிராகரணம் என எட்டு சித்தாந்த சாத்திர நூல்களை இயற்றியுள்ளார். இவை சித்தாந்த அட்டகம் என்று அழைக்கப்படுகின்றன. கோயிற் புராணம், சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராணம், திருமுறைகண்ட புராணம், திருப்பதிகக் கோவை முதலான நூல்களையும் இயற்றியுள்ளார்.

திருவாவடுதுறை ஆதினத்தைத் தாபித்த நமச்சிவாயத் தேவர் இவரது மாணவருள் ஒருவராவார். சந்தான குரவர்களின் பணியினைத் திருவாவடுதுறை ஆதினம் தொடர்ந்து ஆற்றி வருகின்றது. உமாபதி சிவாச்சாரியார் முத்தியடைந்த தினம் சித்திரை மாத அத்த நட்சத்திரமாகும்.

### பயிற்சிகள்

1) சந்தான குரவர் என்றால் என்ன?
2) சந்தான குரவர்களின் பணிகள் எத்தகையது?
3) அகச்சந்தான குரவர், புறச்சந்தான குரவர்களின் பெயர்களை எழுதுக.
4) மெய்கண்ட தேவருக்கும் அருணந்தி சிவாச்சாரிக்கும் இடையிலான சுவாரசியமான சந்திப்பினைப் பற்றி நீர் என்ன நினைக்கின்றீர் என்பதைச் சுருக்கமாக எழுதுக?
5) அருணந்தி சிவாச்சாரியாரிடமும் உமாபதி சிவாச்சாரியாரிடமும் காணப்பட்ட ஒற்றுமைகளைப் பட்டியற்படுத்துக.

### செயற்பாடு

★ சந்தான குரவர்களின் குருபூசைத் தினங்களை அட்டவணைப்படுத்தி, வகுப்பறையிற் காட்சிப்படுத்துக.
★ பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களையும் அதன் ஆசிரியர்கள் பெயர்களையும் அட்டவணைப்படுத்திக் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

★ பக்தியை வளர்க்கும் தோத்திர நூல்களை சமய குரவர்களும், மெய்ஞானத்தை உணர்த்தும் சாத்திர நூல்களை சந்தான குரவர்களும் இயற்றிய வகையில் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

★ திருக்கைலாயத்தில் இறைவனிடம் ஞான உபதேசம் பெற்ற குரு சீடபரம்பரையே திருநந்தி தேவர், சனற்குமார முனிவர், சத்திஞான தரிசனி, பரஞ்சோதி முனிவர், மெய்கண்டதேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் ஆகிய எண்மரும்.

★ மெய்கண்டதேவர் சிவஞானபோதமும், அருநந்தி சிவாசாரியார் சிவஞான சித்தியாகும் என்னும் சித்தாந்த நூல்களை இயற்றியுள்ளனர்.

★ சந்தானர் குரவர் பரம்பரை திருவாடுதுறை ஆதீனத்தின் மூலம் தொடர்கின்றது.